பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 ஐப்பசி 16 வியாழக்கிழமை 03.11.2022 கதிர் 250

## வெள்ளவத்தையில் கோர விபத்து; இளைஞர் ஒருவர் பரிதாப மரணம்

கொழும்பு – வெள்ளவத்தையில் இடம் பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

தனியார் பஸ்ஸும் சைக்கிளும் நேற்று மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

வெள்ளவத்தை, பழைய ஹெவ்லொக் வீதியில், மாயா அவென்யூ ரவுண்டானாவில் இருந்து பாமன்கடைச் சந்தியை 2

## நாமல் கைது!



ஊழல் எதிர்ப்பு முன்னணியின் செயற்பாட்டு பணிப்பாளர் நாமல் குமார வரக்காபொல பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். 2

## சஜித் இன்னும் பாடம் கற்றுக்கொள்ள வேண்டும்



### ஐக்கிய தேசியக் கட்சி கிண்டல்

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இன்னும் பாடம் கற்றுக் கொள்ள வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

ஐக்கிய மக்கள் சக்தி உள்ளிட்ட அரசியல் கட்சிகள் மற்றும் சிவில் அமைப்புகள் இணைந்து கொழும்பில் நேற்று நடத்திய ஆர்ப்பாட்டத்தின் போது, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு எதிராகச் சிலர் எதிர்ப்பு வெளியிட்டமை கவலையளிக்கின்றது.

சஜித் பிரேமதாஸவுடன் குறித்த தரப்பினர் உடன்படிக்கையொன்றை ஏற்படுத்திக் கொண்டே இந்தப் போராட்டத்தைக் கொழும்பில் முன்னெடுத்தனர்.

எதிர்க்கட்சித் தலைவர் இன்னும் பாடம் 2



### மக்கள் விரும்பிய மாற்றம் வந்த பின்

# ஆர்ப்பாட்டங்கள் மீண்டும் எதற்கு?

### எதிரணியிடம் ரணில் கேள்விக்கணை

**நாட்டில் மக்கள் விரும்பிய மாற்றம் ஏற்பட்ட பின்னர் மீண்டும் ஆர்ப்பாட்டங்கள் எதற்கு? – என்று எதிரணியிடம் கேள்வி எழுப்பியுள்ளார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.** 8

### முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்துவதில் தாமதம்:

## அதிருப்தியடைந்த ஜனாதிபதி சபாநாயகருக்கு அவசர கடிதம்

நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளின் தலைவர்களுடன் கலந்துரையாடிய பின்னர் நாட்டில் நீண்டகால முறைமை மாற்றங்களை ஏற்படுத்தும் நோக்கில் முன்வைக்கப்பட்ட முன்மொழிவுகளை 8

## போதைப்பொருளை ஒழிக்க சகலரும் ஒன்றிணைவோம்!

### தமிழரசின் தலைவர் மாவை அழைப்பு



தமிழர் பிரதேசங்களில் போதைப்பொருளை முற்றாக ஒழிக்க அனை வரும் ஒன்றிணைந்து நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை. சோ. சேனாதிராஜா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:–

போதைப்பொருள் விநியோகத்தின் மையமாக வடக்கு மாகாணம் திகழ்கின்றது என்று நீதி அமைச்சர் வெளியிட்டுள்ள கருத்து மக்களைப் பேரதிர்ச்சிக்கு உள்ளாக்கியுள்ளது.

வடக்கில் இளையோரைக் குறிவைத்து போதைப் பொருள் விநியோகிக்கப்படுகின்றது. 2

## முல்லையில் விமானப்படைச் சிப்பாய் சூட்டுக் காயங்களுடன் சடலமாக மீட்பு




முல்லைத்தீவு – கேப்பாப்பிலவு பகுதியில் அமைந்துள்ள விமானப்படைத் தளத்தில் கடமையாற்றும் விமானப்படைச் சிப்பாய் ஒருவர் சூட்டுக் காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவர் நேற்றிரவு 2

## வடக்கு மாகாணத்தில் இவ்வருடம் 16 படையினரின் சடலங்கள் மீட்பு!

### தொடரும் மர்மங்கள்

வடக்கு மாகாணத்தில் படையினரின் மர்ம மரணங்கள் தொடர்கின்றன.

வடக்கில் இவ்வருடம் இதுவரை 16 படையினரின் (இராணுவம், கடற்படை, விமானப் படை) சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. இதில் 13 சடலங்கள் துப்பாக்கிச்சூட்டுக் காயங்களுடன் மீட்கப்பட்டுள்ளன,

16 சடலங்களில் 11 பேர் கற் கொலை செய்துள்ளனர் 2

## நைஜீரியாவில் 39 சிறுவர்கள் துப்பாக்கி முனையில் கடத்தல்



வடமேற்கு நைஜீரியாவில் பண்ணை ஒன்றில் பணிபுரிந்து வந்த 40 சிறுவர்களை ஆயுதமேந்திய கும்பல் கடத்திச் சென்று, அவர்களை விடுவிக்கக் கப்பம் கோரி குயுள்ளது என அந்நாட்டுப் பொலிஸார் தெரிவித்தனர்.

கட்சினா மாநிலத்தின் ஃபஸ்கரி மாவட்டத்தில்உள்ள மைருவா கிராமத்துக்கு வெளியே உள்ள 2

### இடர்களை எதிர்கொள்ள

## முல்லை மாவட்டத்தில் 154 முகாம்கள் தயார்



பருவப் பெயர்ச்சி மழையால் ஏற்படும் இடர்களை எதிர்கொள்ளும் வகையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் 154 இடைத்தங்கல் முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன என்று முல்லைத்தீவு மாவட்ட இடர் 2

## முல்லையில் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தன்னைத்தானே சுட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

குருநாகல் பகுதியைச் சேர்ந்த 26 வயதுடைய சிப்பாயே இவ்வாறு தவறான முடிவெடுத்துள்ளார் என்று விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. உயிரிழந்தவரின் சடலம் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் பொலிஸ் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு மரண விசாரணை அறிக்கை பெறப்பட்ட பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## போதைப்பொருளை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாடசாலை மாணவர்களும் இதற்கு அடிமையாகியுள்ளனர்.

எதிர்காலத்தில் எமது சமுதாயத்தை வழிநடத்துபவர்கள் இன்று போதைப் பொருள் பாவனையால் அழிந்து போவதை நாம் கைகட்டி வேடிக்கை பார்க்க முடியாது. இதற்கு உடனடியாக முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.

வடக்கில் மட்டுமன்றி தமிழர் வாழும் பிரதேசங்களில் போதைப்பொருளை முற்றாக ஒழிக்க அனைவரும் ஒன்றிணைந்து நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் – என்றார்.

## சஜித் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கற்றுக்கொள்ள வேண்டிய நபராவார். ரணில் விக்கிரமசிங்க போன்ற தலைவருடன், 20 ஆண்டுகளுக்கு மேலாகப் பணியாற்றி விட்டு, அவருக்கு அரசியல் அல்லது செயற்படும் முறை குறித்து கற்றுக்கொள்ள முடியாவிட்டால், கற்றுக்கொள்வதற்கான மற்றுமொரு சந்தர்ப்பம் அவருக்குக் கிடைக்காது – என்றார்

இதேவேளை, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளர் தயாசிறி ஜயசேகர, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியை, எதிர்க்கட்சித் தலைவருடன் இணைக்க முயற்சிக்கின்றார் என்று அமைச்சர் மகிந்த அமரவீர குற்றம் சுமத்தியுள்ளார்.

நேற்றைய ஆர்ப்பாட்டத்தில் எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுடன் தயாசிறி ஜயசேகரவும் பங்கேற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## வடக்கு ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்றும், 2 பேர் சக சிப்பாய்களால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர் என்றும், 3 பேர் திடீர் சுகயீனம் காரணமாக இறந்துள்ளனர் என்றும் பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## முல்லை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முகாமைத்து உதவிப் பணிப்பாளர் சி. லிங்கேஸ்வரகுமார் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

முல்லைத்தீவு மாவட்டத்தில் 154 இடைத்தங்கல் முகாம்கள் தயார்ப்படுத்தப்பட்டுள்ளன.

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் 35 இடைத்தங்கல் முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இயற்கை இடர் ஏற்படுடம் பட்சத்தில் மக்களைப் பாதுகாப்பாகத் தங்க வைக்கத் தேவையான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன – என்றார்.

## நைஜீரியாவில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பண்ணை ஒன்றில் கூலிக்குப் பயிர்களை அறுவடை செய்து கொண்டிருந்த 39 சிறுவர், சிறுமிகளை வாகனங்களில் வந்த துப்பாக்கிதாரிகள் இவ்வாறு கடத்தியுள்ளனர் என்று கட்சினா பொலிஸ் செய்தித் தொடர்பாளர் காம்போ இசா கூறினார்.

பண்ணைக்குள் கொள்ளையர்கள் நுழைந்தபோது, அங்கு பணிபுரிந்த பெரியவர்கள் தப்பியோடினர் என்றும், துரதிஷ்டவசமாக சிறுவர்கள் சிக்கிக் கொண்டனர் என்றும் சம்பவத்தை நேரில் அவதானித்த ஒருவர் தெரிவித்துள்ளார்.

கடத்தப்பட்ட சிறுவர்கள் 15 – 18 வயதுகளுக்கு இடைப்பட்டர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடத்திய சிறுவர்களை விடுவிப்பதற்கு, குறித்த பண்ணையாளரிடம், 50 ஆயிரம் அமெரிக்க டொலர்களைக் கடத்தல்காரர்கள் கப்பமாகக் கோரியுள்ளனர் என்றும், கடத்தப்பட்ட ஒருவரிடமிருந்த கைபேசி மூலம் அவர்கள் தொடர்பு கொண்டுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தப் பணயக்கைதிகளை மீட்பதற்கும் கடத்தல்காரர்களைக் கைது செய்வதற்கும் அப்பகுதிக்குத் தமது குழுவினர் விரைந்துள்ளனர் என்று கட்சினா பொலிஸ் செய்தித் தொடர்பாளர் காம்போ இசா மேலும் தெரிவித்தார்.

## வெள்ளவத்தை......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நோக்கிச் சென்ற சைக்கிளை தனியார் பஸ் சாரதி முந்திச் செல்ல முற்பட்ட போது இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் பலத்த காயமடைந்த இளைஞர் களுபோவில போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போதும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக களுபோவில வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

விபத்தில் உயிரிழந்தவர் மாத்தளைப் பகுதியைச் சேர்ந்த 23 வயதான இளைஞர் எனத் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் தனியார் பஸ் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வெள்ளவத்தைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## நாமல்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெண் ஒருவரிடம் பாலியல் சேஷ்டை செய்த குற்றச்சாட்டில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

தனது வீட்டுக்குள் வைத்து தன்னைப் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தினார் என்று குறித்த பெண் பொலிஸ் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

பின்னர், குறித்த பெண் அவரை வீட்டில் இருந்து வெளியே இழுத்து வந்து மரத்தில் கட்டி வைத்து தாக்கினார் என்றும், மேலும் நான்கு பேரும் நாமல் குமாரவைத் தாக்கினர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நாமல் குமாரவினால் பாலியல் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டார் என்று கூறப்படும் குறித்த பெண் வரக்காபொல வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, பின்னர் அங்கிருந்து வெளியேறியுள்ளார்.

இதேவேளை, வாரியகொட பகுதியில் சட்டவிரோதமாக மதுபானம் விற்பனை செய்யும் வீடொன்று தொடர்பில் தகவல் சேகரிப்பதற்காகத் தனது மனைவியுடன் சென்ற போது குறித்த பெண் உள்ளிட்ட குழுவினரால் தான் தாக்கப்பட்டார் என்று நாமல் குமார வரக்காபொல பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

நாமல் குமார தாக்கப்பட்டார் என்று கூறப்படும் சம்பவம் தொடர்பில் சந்தேகநபரான பெண் உட்பட ஐவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

எனினும், சந்தேகநபர்கள் ஐவரும் நேற்று வரக்காபொல நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டதன் பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.




# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## இவை எட்டாக்கனிகள்

கார்த்திகை மாதம் பிறந்தாலே தமிழர் தேசத்தில் பதற்றம்தான்.

அதுவும் கொழும்பு ஆட்சி அதிகாரத்தில் பௌத்த, சிங்கள பேரினவாத வெறித் தலைமைகள் இருந்தால் சொல்லத் தேவையில்லை.

இனத்துக்காக வித்தான போராளிகளை கார்த்கை மாதத்தில் நினைவு கூருவது வழமை. அப்படி நினைவு கூர்ந்தால் விடுதலைப் புலிகள் இயக்கம் புனர்ஜென்மம் எடுத்து, விஸ்வரூபம் பெற்றுவிடும் என்ற அச்சம் சிங்களத்துக்கு.

யுத்தம் முடிவுற்ற பின்னரும் இந்தப் பயத்தில் – பீதியில் – அச்சத்தில் – இருந்து சிங்கள பேரினவாதம் இன்னும் மீளவே இல்லை.

யுத்தம் முடிந்து, ராஜபக்ஷக்கள் அதிகாரத்தில் இருந்த காலத்தில் எல்லாம், இந்த பிரமை – பயம் – அச்சம் – அந்தச் சிங்கள ஆட்சி பீடங்களுக்கு இருந்தே வந்திருக்கிறது.

அதனால் அச்சமயங்களில் எல்லாம் கார்த்திகை மாதம் என்பது தமிழர் தாயகத்தில் பெரும் நெருக்கடிக்கான காலமாகவே இருந்து வந்துள்ளது.

எனினும் மைத்திரி – ரணில் நல்லாட்சி காலத்தில், 2015 – 2018 காலப்பகுதியில், ஒரு புரிந்துணர்வு நிலையில் மக்கள் இயல்பாகவே நினைவேந்தல்களை மேற்கொண்டமையைக் கண்டோம்.

அதாவது தமிழர்கள் அநியாயமாக பறிக்கப்பட்ட தங்களது உறவுகளின் நினைவேந்தலை அனுஷ்டிப்பதா, இல்லையா என்பது இலங்கையின் சட்ட, திட்ட ஏற்பாடுகள் அல்ல, இலங்கையின் ஆட்சிப் பீடங்களால் தான் தீர்மானிக்கப்படும் நிலைமையே இருந்து வருகின்றது.

இதுதான் இலங்கையின் சட்டத்தின் ஆட்சியின் சீத்துவக் கேடு ஆகும்.

புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதவியேற்ற கையோடு மக்கள் தங்கள் உறவுகளுக்கு இயக்க அடையாளங்கள் இல்லாமல் நினைவேந்தல் செய்வதற்கு எந்த தடையும் இல்லை என்று அறிவிப்புத் தந்திருந்தார்.

அப்படி இருந்தும் இராணுவம் தனது வழமையான பௌத்த, சிங்களப் பேரினவாதக் கெடுபிடி மேலாதிக்கப் போக்கிலிருந்து, ஆணவமாகச் செயல்படும் பண்பைக் கைவிடுவதாக இல்லை.

அதனால் ஆங்காங்கே மாவீரர் துயிலும் இல்லங்களைத் துப்புரவு செய்யச் செல்லும் பொதுமக்கள் மற்றும் அவர்களின் பிரதிநிதிகளுடன் படைத்தரப்பு உரசுப் பட்டு பதற்றம் ஏற்படுத்தும் நடவடிக்கைகள் தொடர்கின்றன.

மாவீரர் தினம் அனுஷ்டிப்பதால் விடுதலைப் புலிகள் இயக்கம் மீளுருப் பெற்றுவிடும் என்ற முட்டாள்தனமான சிந்தனையில் தென்னிலங்கை மூழ்கிக் கிடக்கும் வரை இந்தத் தேசத்திற்கு விடிவு கிட்டாது என்பது தான் உண்மை.

போராளியோ அல்லது சாதாரண நபரோ உயிரிழந்த ஒருவரின் நினைவாக நினைவேந்தல் நடத்தக் கூட அனுமதி இல்லை என்று அடக்குமுறை அல்லது மனக்குமுறல் இந்த நாட்டில் நீடிப்பது இன சௌஜன்யத்துக்கு வழி வகுக்காது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு புரிந்த இந்த உண்மை ஏனைய தென்னிலங்கை பௌத்த, சிங்களவர்களுக்கு வரும் வரை, இந்த நாட்டில் சமாதானம், அமைதி, புரிந்துணர்வு நல்லிணக்கம் எல்லாம் எட்டாக்கனிகள்தான்.

# அத்தியாவசியப் பொருள்களின் விலைகளை கட்டுப்படுத்த உடன் நடவடிக்கை வேண்டும்

## கரு ஜயசூரிய கோரிக்கை



பொருள்கள் மற்றும் சேவைகளின் விலைகளை ஒழுங்குபடுத்துவதற்கு அரசாங்கம் உரிய மற்றும் விரைவான நடைமுறை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

நாட்டின் சாமானிய மக்களுக்கு கடுமையான அநீதியை ஏற்படுத்தும் வகையில் நியாயமற்ற முறையில் இது உயர்த்தப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இன்று நாட்டில் அத்தியாவசிய நுகர்வுப் பொருள்களின் விலைகளைக் கருத்திற் கொள்ளும் போது மக்கள் பெரும் சிரமத்துக்கு உள்ளாகுகின்றனர்எனவும்அவர்குறிப்பிட்டுள்ளார்.

# வடக்கு, கிழக்கு என்ற எந்த பிரிவினையும் இன்றி தமிழர் தேசத்துக்காக ஒன்றாக இணையவேண்டும்!

## யாழ். பல்கலை மாணவ ஒன்றியத் தலைவர் தர்சன் அழைப்பு



வடக்கு, கிழக்கு என்ற எந்த பிரிவினையும் இன்றி தமிழர் தேசத்துக்காக – தமிழர்களுடைய பிரச்சினைகளுக்காக – ஒன்றாக இணைந்து செயற்பட வேண்டும் என வடக்கு கிழக்கு தமிழ் மாணவ ஒன்றிய தலைவரும், கிழக்கு பல்கலைக்கழக கலை, கலாசார மாணவர் ஒன்றியத்தின் தலைவருமான தர்சன் தெரிவித்தார்.

நேற்று (புதன்கிழமை) வலி.வடக்கில் நடைபெற்ற போராட்டத்தின் பின் ஊடகங்களுக்குக் கருத்துத்தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

வலி. வடக்கில் 2 ஆயிரத்து 467 ஏக்கர் பரப்பளவை இராணுவம் கைப்பற்றியுள்ளது. இதனை மக்கள் விடுவிக்க கோரி நீதிமன்றத்திலே போராடிக் கொண்டிருக்கின்ற போதிலும் தற்போது அந்த இடத்தை இராணுவத்தினர் வசப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கின்றனர்.

இதனை நாங்கள் பார்த்துக்கொண்டு சும்மா இருக்க முடியாது. மாணவர் சக்தியாக நாங்கள் இணைந்து இதற்கு எதிராகக் குரல் கொடுத்துக்கொண்டிருக்கி றோம். வடக்கில் இருந்து கிழக்கும், கிழக்கில் இருந்து வடக்குக்குமாக இன்றும் இந்த பயணம் தொடர்கிறது. இன்று முதல் வடக்கு, கிழக்கு என்று எந்த பிரிவினையும் இன்றி தமிழர் தேசத்துக்காக தமிழர்களுடைய பிரச்சினைகளுக்காக ஒன்றாக இணைந்து செயற்பட வேண்டும் என்பதைக் கூறிக்கொள்கிறேன் என்றார்.

# புத்திசாலிகள், படித்தவர்கள் என கூறிக்கொள்ளும் அரசியல்வாதிகள் தொடர்பில் நாமலுக்குக் கவலை!

புத்திசாலிகள், படித்தவர்கள் என்று கூறிக்கொள்ளும் சில அரசியல்வாதிகள் குறுகிய மனப்பான்மையுடன் அரசியல் நிகழ்ச்சி நிரல்களை முன்னெடுப்பதில் மாத்திரம் ஆர்வம் காட்டுகின்றமை தொடர்பாக தான் வருத்தமடைகிறேன் என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.



முன்னாள் அமைச்சர் சன்ன ஜயசுமனவின் கருத்துக்கு பதிலளித்த அவர், சன்ன ஜயசுமன தனது முந்தைய அறிக்கையில் எதிர்வரும் வரவு செலவுத் திட்டம் தோற்கடிக்கப்படும் என்று முன்னறிவித்துள்ளார்.

அவர் கட்சியை விட்டுவெளியேறியமையால், இதுபோன்ற அறிக்கையை வெளியிடுகின்றமை வெளிப்படையானது என்று கூறியுள்ளார்.

இந்த யோசனைகளை நாம் விமர்சிக்காமல் மக்களின் பக்கம் நின்று தீர்மானங்களை எடுக்க வேண்டும் என நாமல் ராஜபக்ஷ மேலும் தெரிவித்துள்ளார்.

# வட்டு இந்துவின் பழைய மாணவர் பொதுக் கூட்டம்

யாழ். வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம் எதிர்வரும் 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கல்லூரியின் பிரதான மண்டபத்தில், இடம்பெறவுள்ளது.

இதன்போது பழைய மாணவர் சங்கத்தின் யாப்பு சீர்திருத்தம் மற்றும் புதிய நிர்வாகத்தெரிவுஆகியனவும்இடம்பெறவுள்ளன.

# இலங்கைக்கான விமான சேவையை மீண்டும் ஆரம்பித்தன இரண்டு நாடுகள்

ரஷ்ய மற்றும் பிரான்ஸ் விமான சேவைகள் இலங்கைக்கான விமான சேவைகளை மீண்டும் ஆரம்பிக்கவுள்ளன என சுற்றுலாத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

ரஷ்யாவின் முக்கிய விமானச் சேவைகளில் ஒன்றான ‘அஸூர் எயார்’ இன்று (வியாழக்கிழமை) முதல் விமான சேவையைத் தொடங்கும் என சுற்றுலாத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்தோடு பிரான்ஸ் நாட்டின் தேசிய விமான நிறுவனமான ‘எயார் பிரான்ஸ்’ நாளை (வெள்ளிக்கிழமை) முதல் விமான சேவையை ஆரம்பிக்கும் என்றும் சுற்றுலாத்துறை அமைச்சு அறிவித்துள்ளது.

இந்த விமானங்கள் வாரந்தோறும் சேவையில் ஈடுபடும் என்றும் சுற்றுலாத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

# ஒரே நாளில் 23 ஏவுகணைகளை அடுத்தடுத்து ஏவியது வடகொரியா

## அதனால் தீபகற்பத்தில் பெரும் பதற்றம்



சியோல், நவ.03

நேற்று மட்டும் 23 ஏவுகணைகளை பரிசோதனை செய்த வடகொரியாவின் நடவடிக்கையால் கொரிய தீபகற்பத்தில் பதற்றம் நிலவுவதாகத் தெரிவிக்கப் படுகிறது.

பதிலுக்கு தென்கொரியாவும் ஏவுகணைகளை ஏவியுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

அணு ஆயுதுங்களை தாக்கிச்செல்லும் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளை சோதனை செய்து உலக நாடுகளுக்கு அதிர்ச்சி கொடுத்து வரும் வட கொரியா, தனது எதிரி நாடுகளான தென் கொரியா மற்றும் அமெரிக்காவை சீண்டும் வகையில் தொடர்ந்து ஏவுகணைச் சோதனைகளை நடத்தி வருகின்றது.

அந்த வகையில், தென்கொரியாவுடன் இணைந்து அமெரிக்கா இராணுவப் பயிற்சியில் ஈடுபடுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து வடகொரியா ஏவுகணைச் சோதனைகளைத் தொடர்ந்து நடத்தி வருகிறது. மேலும், அணு ஆயுதங்களை பயன்படுத்தவும் தயங்கமாட்டோம் என்றும் வடகொரியா தொடர்ந்து எச்சரிக்கை விடுத்து வருகிறது.


இந்நிலையில், வடகொரியா நேற்று ஒரேநாளில் 23 ஏவுகணைகளை ஏவி அதிரடி சோதனை நடத்தியுள்ளது. காலை 17 ஏவுகணைகளையும் நண்பகல் 6 ஏவுகணைகளும் என மொத்தம் 23 ஏவுகணைகளை ஏவி வடகொரியா மிரட்டியுள்ளது. மேலும், 100க்கும் மேற்பட்ட பீரங்கி குண்டுகளை பதற்றம் நிறைந்த கிழக்கு கடற்பகுதியில் வீசி வடகொரியா சோதனை நடத்தியுள்ளதாகவும் தென்கொரியா தெரிவித்துள்ளது.

வடகொரியா ஏவுகணை சோதனை நடத்திய அதே பகுதியில் தென்கொரியாவும் ஏவுகணைகளை ஏவி பதிலடி கொடுத்துள்ளது.

இரு நாடுகளும் அடுத்தடுத்து ஏவுகணை சோதனை நடத்தி வருவதால் கொரிய தீபகற்பத்தில் பதற்றம் அதிகரித்துள்ளதாகக் கூறப்படுகின்றமை குறிப்பிடத் தக்கது.

# அமெரிக்காவில் மற்றொரு பேய்த் திருவிழாவில் திரும்பவும் துப்பாக்கிச் சூடு; 14பேருக்கு காயம்



இல்லினாய்ஸ்,நவ.03

அண்மையில் அமெரிக்காவில் நடைபெற்ற பேய்த்திருவிழாவில் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டமையைத் தொடர்ந்து நேற்றைய தினமும் இடம்பெற்ற மற்றொரு பேய்த்திருவிழாவில் மர்ம நபர்கள் நடாத்திய துப்பாக்கிச் சூட்டில் 14பேர் காயமடைந்துள்ளனர்.

அமெரிக்காவின் இல்லினாய்ஸ் மாகாணத்தில் உள்ள பரபரப்பு நிறைந்த சிக்காகோ நகரில் ஹாலோவீன் கொண்டாட்டத்தில் மக்கள் ஈடுபட்டு இருந்தனர். இந்த நிலையில், காரில் வந்த மர்ம நபர்கள் இரண்டு பேர் திடீரெனக் கூட்டத்தினரை நோக்கித் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர்.

இந்த சம்பவத்தில் 3 வயது சிறுவன், 11 வயது சிறுமி மற்றும் 13 வயதுசிறுவன் உள்பட 14 பேர் காயமடைந்தனர். அவர்களில் 2 பேரின் நிலைமை மோசமடைந்தும், 5 பேர் தீவிர சிகிச்சையிலும் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது. மேலும், துப்பாக்கிச் சூடு நடப்பது தெரிந்ததும் உடனடியாக, அந்த பகுதியில் இருந்து தப்பியோடிய பெண் ஒருவர் அந்த வழியே வந்த கார் ஒன்றுடன் மோதியதில் பலத்த காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள் ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், அமெரிக்காவின் கன்சாஸ் நகரில் கடந்த திங்கட்கிழமை ஹாலோவீன் கொண்டாட்டத் தின்போது, நடந்த துப்பாக்கி சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் பலியாகியிருந்தார் என்பதுடன் 6 பேர் காயமடைந்தனர்.

அமெரிக்காவில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளமையுடன், அதனைக் கட்டுப்படுத்த அதிபர் பைடன் தலைமையிலான அரசாங்கம் பல்வேறு முயற்சிகளை எடுத்தபோதும், தொடர்ந்து இதுபோன்ற துப்பாக்கி சூட்டுச் சம்பவங்கள் அதிகரித்தே வருகின்றமை குறிப்பிடத் தக்கது.

# சவுதி எரிசக்தி நிலையங்களைத் தாக்குவதற்கு ஈரான் முயற்சிப்பதாக அமெரிக்கா எச்சரிக்கை



நியூயார்க், நவ.03

சவுதி அரேபியாவில் உள்ள மிகப்பெரிய எண்ணெய் வளப் பகுதியான ஹிஜ்ரா குரையாஸில் அராம்கோ நிறுவனம் செயல்பட்டுவருகின்ற நிலையில் இங்குள்ள இரு எண்ணெய் ஆலைகள் மீது ஆளில்லா விமானங்கள் மூலம் ஏமன் கிளர்ச்சிப் படையினர் தாக்குதல் நடத்தியிருந்தனர். இந்தத் தாக்குதலுக்கு சவுதி கிளர்ச்சியாளர்கள் பொறுப்பேற்றனர். எனினும், இதன் பின்னணியில் ஈரான் உள்ளதாக சவுதி, அமெ ரிக்கா ஆகிய நாடுகள் குற்றம் சுமத்தின. இதனால், ஈரான் – சவுதி இடையே பதற்றம் நீடித்திருந்தது.

இதனால், பேச்சுவார்த்தை மூலம் சமாதானத்தை ஏற்படுத்த இரு நாடுகளும் முடிவு செய்து பேச்சுவார்த்தையை தொடர்ந்தன.

ஆனால், ஒரு வருடத்துக்கு மேலாகியும் முடிவு எட்டப்படாமல் இருந்த நிலையில், மீண்டும் ஈரான் மற்றும் சவுதி அரேபியா இடையே பதற்றம் அதிகரித்துள்ளது. இந்த நிலையில் அமெரிக்க வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் நெட் பிரைஸ் ஈரானுக்கு எச்சரிக்கைச் செய்தியொன்றைத் தெரிவித்துள்ளார்.

அதில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது சவுதி அரேபியாவில் உள்ள எரிசக்தி உற்பத்தி மையங்களில் ஈரான் தாக்குதல் நடந்த வாய்ப்பிருப்பதாக எங்க ளுக்குத் தகவல் கிடைத்துள்ளது. எங்கள் நலன்களையும் பிராந்தியத்தில் உள்ள எங்கள் நட்பு நாடுகளையும் பாதுகாக்க நாங் கள் தயங்க மாட்டோம். தற்போது பிராந்தியத்தில் அமெரிக்க இராணுவப் பாதுகாப்பு நிலை களை அதிகரிக்க வேண்டிய நிலை இல்லை. எனினும், பாதுகாப்பு அச்சுறுத்தல் குறித்து கவலை கொண்டுள்ளோம் – என்று தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், சவுதி அரேபியா அமெரிக்க அதிகாரிகளுடன் உளவுத்துறை தகவல்களை பகிர்ந்து கொண்டதுடன், ஈரான் மீதான உடனடித் தாக்குதலுக்குத் தயாராகி வருவதாகக் சவுதி அரேபியா அதில் கூறியுள்ளது.

# பெண்களுநக்கு கல்வி எதற்கு எனத் துரத்தி தலிபான்கள் ஆப்கானில் பெரும் அடாவடி





காபூல்,நவ.03

ஆப்கானிஸ்தானில் தலிபான்களின் ஆட்சி நடந்து வருகிறது. அவர்கள் பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்து வருகின்றார்கள். குறிப்பாக பெண்களுக்குக் கடுமையான கட்டுப்பாடுகளை விதித்துள்ளனர்.

மிகமுக்கியமாக பெண் குழந்தைகள் பாடசாலைகளுக்குச் செல்வதற்குத் தடை விதித்துள்ளனர். இதற்கு சர்வதேச அளவில் கடும் எதிர்ப்பு நிலவிவருகின்றது.

இந்த நிலையில் பல்கலைக்கழக மாணவிகளைத் தலிபான்கள் தாக்கும் காணொலிகள் வெளியாகியுள் ளன. அதில், வடகிழக்கு ஆப்கானிஸ்தானில் உள்ள படாசவுன் பல்கலைக்கழக நுழைவு வாயில் முன்பு மாணவிகள் பலர் காத்து இருக்கின்ற நிலையில் அவர்களை பல்கலைக்கழகத்துக்குள் நுழைய விடாமல் தலிபான்கள் தடுத்து நிறுத்தியுள்ளனர்.

பின்னர் ஒரு அதிகாரி மாணவிகளைத் தாக்கி விரட்டியடித்திருக்கின்றார்.

பர்தா அணியாததால் பல்கலைக் கழகத்துக்குள் செல்ல அனுமதிக்கவில்லை என்று கூறப்பட்ட நிலையில் மாணவிகள் அனைவரும் சரியாக பர்தா அணிந்து இருந்தனர்.

ஆனாலும் அவர்களை வகுப்புக்குச் செல்ல விடாமல் தடுத்து விரட்டியடித்துள்ளனர்.

மேலும், மாணவிகளை தாக்கிய அதிகாரி தலிபான் அரசாங்கத்தின் துணை மற்றும் நல்லொழுக்க அமைச்சகத்தின் அதிகாரி என்பது தெரிய வந்துள்ளது.

ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் ஆட்சியில் அடிப்படைவாதம் தலைதூக்கி, பெண்களின் உரிமைகள் முழுமையாகப் பறிக்கப்பட்டுள்ளன. பெண்கள் மற்றும் சிறுமிகள் மீதான தலிபான்களின் அடக்குமுறை தொடரும் வண்ணமே உள்ளமையால் கடுமையான எதிர்ப்பலைகள் உருவாகி வருகின்றமை குறிப்பிடத் தக்கது.

# பெண்ணுரிமை சமூகப் போராளி எலா பட் நேற்றுக் காலமானார்



புதுடெல்லி, நவ.3

நாட்டில் பொருளாதார ரீதியில் பெண்கள் அதிகாரம் பெற வேண்டும் என்பதற்காகப் போராடிய பெண்ணுரிமை சமூகப் போராளி எலா பட் தனது 89ஆவது வயதில் நேற்றுக் காலமானார்.

பெண்களின் பொருளாதார நலன்களுக்காக இந்தியாவின் முதல் மகளிர் வங்கியான சேவா என்ற கூட்டுறவு வங்கியை 1973 ஆம் ஆண்டு அவர் தொடங்கியிருந்தார். மகளிர் உலக வங்கியின் துணை நிறுவுநராகவும் அவர் இருந்துள்ளார். அவருக்கு 1985 ஆம் ஆண்டில் நாட்டின் உயரிய பத்மஶ்ரீ விருதும், 1986 ஆம் ஆண்டில் நாட்டின் 3ஆவது உயரிய பத்ம பூஷண் விருதும் வழங்கப்பட்டன. தொழில் முனைவோராக பெண்களுக்கு அதிகாரம் கிடைக்க செய்வதற்கான அவரது முயற்சிக்காக2011ஆம் ஆண்டு காந்தி அமைதி விருதும், சமூக தலைமைத்துவத்திற்காக 1977 ஆம் ஆண்டில் மகசேசே விருதும் அவர் பெற்றுள்ளார்.

தி எல்டர்ஸ் என்ற சர்வதேச என்.ஜி.ஓ. அமைப்பிலும் பணியாற்றி உள்ள அவர், இதில் இருந்தபடி, பாலின சமத்துவம், குழந்தை திருமணம் உள்ளிட்ட சமூகதீங்குகளைக்களைதல்போன்றவிடயங்களுக்காகப் பணியாற்றி உள்ளார். வழக்கறிஞராகவும் இருந்துள்ளார். பெண்களை நிதி சார்ந்து கல்வியறிவு பெற்றவர்களாகவும்மற்றும்அதிகாரம்படைத்தவர்களாகவும் உருவாக்கும் பணியில் தன்னை ஈடுபடுத்தி கொண்ட அவரது மறைவுக்கு பல்வேறு தலைவர்களும் இரங்கல் தெரிவித்து உள்ளனர்.

# குழந்தைகள் நட்புறவு வசதிகளுடன் 16 பொலிஸ் நிலையங்கள் ஒடிசாவில்!







புவனேஸ்வர், நவ.3

ஒடிசா மாநிலத்தில் பொலிஸ் நிலையங்களுக்கு பல்வேறு புகார் காரணங்களுக்காக வரும் குழந்தைகளுக்கு மன அழுத்தத்தை போக்கும் விதமாகவும், காவல் நிலையம் குறித்த பயத்தை நீக்கும் வகையிலும் குழந்தைகளுக்கான சிறப்பு அமைப்புகளைக் கொண்ட (Child Friendly Police Stations) 16 பொலிஸ் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன.

இதற்காக பொலிஸ் நிலையங்களில் விளையாட்டுப் பொருள்கள், காமிக்ஸ் புத்தகங்கள், பல வண்ணங்களைக் கொண்ட சுவர் ஓவியங்கள், தாய்ப்பால் ஊட்டும் அறை உள்ளிட்ட பல்வேறு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதே போல் மாநிலம் முழுவதும் மேலும் 18 பொலிஸ் நிலையங்களைத் திறக்க உள்ளதாக ஒடிசா முதலமைச்சர் நவீன் பட்நாயக் தெரிவித்துள்ளார்.

# வயல் வேலை செய்த விவசாயிகள் ஆறு பேர் மின்சாரம் தாக்கி மரணம்



அனந்தப்பூர், நவ.3

ஆந்திர பிரதேசத்தின் அனந்தப்பூர் மாவட்டத்தில் ராயதுர்கம் பொம்மசஹால் பகுதியில் தர்காஹொன்னூர் என்ற இடத்தில் விவசாய நிலத்தில் சிலர் அறுவடை பணியில் ஈடுபட்டு கொண்டு இருந்த போது மின்சாரம் தாக்கியதில் ஆறு பேர் உயிரிழந்துள்ளனர்.

தொழிலாளர்கள், ஆமணக்கு பயிர்களை வெட்டி உழவு இயந்திரத்தில் போட்டபடி இருந்துள்ளனர். இந்த நிலையில், உயர் அழுத்த மின்கம்பி வயலில் வேலை செய்தவர்கள் மீது திடீரென விழுந்துள்ளது. இந்த சம்பவத்தில் 4 பெண்கள் மற்றும் 2 ஆண்கள் என மொத்தம் 6 விவசாய தொழிலாளர்கள் மின்சாரம் தாக்கி உயிரிழந்தனர்.

சம்பவம் பற்றி அறிந்ததும், உடனடியாக மின்சார துறை, மின் இணைப்பை துண்டித்தது. எனினும், சம்பவத்துக்கான காரணம் பற்றி உடனடியாகத் தெரிய வரவில்லை.

கடந்த ஜூன் மாதம் 30 ஆம் திகதி இதே மாவட்டத்தில் சிலகொண்டையாபள்ளி என்ற கிராமத்தில் 12 பேரை ஏற்றி சென்ற முச்சக்கர வண்டி ஒன்றின் மீது மின்சாரம் தாக்கியதில், 6 விவசாய பெண் தொழிலாளர்கள் உயிரிழந்தனர். 3 பேர் படுகாயம் அடைந்திருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.



# போதைக்கு அடிமையான இளம் மகனை கூலிப் படை மூலம் கொன்ற பெற்றோர்!

## தெலுங்கானாவில் சம்பவம்

கம்மம், நவ.3

தெலுங்கானாவில் கம்மம் மாவட்டத்தில் சூரியபேட்டை பகுதியில் கொலைசெய்யப்பட்ட 26 வயதுடைய வாலிபர் ஒருவரின் உடலைக் கைப்பற்றிய பொலிஸார் மேற்கொண்ட தீவிர விசாரணைகளில், பல திடுக்கிடும் தகவல்கள் வெளியாகியுள்ளன.


சாய்ராம் என்ற இந்த இளைஞர் மது மற்றும் போதைக்கு அடிமையாகி இருந்துள்ளமையுடன், பெற்றோரையும் துன்புறுத்தி வந்துள்ளார். இதனால், மகனை கொலை செய்யப் பெற்றோர் முடிவு செய்துள்ளனர். இதற்காக அந்த இளைஞனின் தாயின். சகோதரர் உதவி மூலம், கூலிப்படையைத் தயார் செய்து வைத்து உள்ளனர். இதற்காக ஒன்றரை லட்சம் ரூபா முன்பணம் கொடுக்கப்பட்டு உள்ளதுடன். சம்பவம் நடந்த பின்னர், 3 நாள்களில் மீதி தொகையான ஆறரை லட்சம் ரூபா தரப்படும் என ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டு உள்ளது.

இதன் பின்பு, அந்த இளைஞனின் தந்தை மற்றும் மாமன் ஆகியோர் இளைஞனை அருகிலுள்ள உள்ள கோவிலுக்கு அழைத்து சென்றமையுடன், ஓரிடத்தில் ஒன்றாக மது குடித்துள்ளனர். அந்த இளைஞன் மது குடித்ததும் கூலிப்படை உதவியுடன் அவரை கயிற்றால் கழுத்து பகுதியில் இறுக்கி கொலை செய்துள்ளனர் எனத் தெரிய வந்துள்ளது.

இந்த சம்பவத்தில் வாலிபரின் பெற்றோரை பொலிஸார் கைது செய்துள்ளனர். மேலும், கூலிப் படைக் குற்றவாளிகளில் 4 பேரை கைது செய்துள்ளனர் என்பதுடன், தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் எனத் தெரிவித்துள்ளனர்.







# 30 கோடி ரூபா பெறுமதி ஹெரோயினுடன் நைஜீரிய பெண் விமான நிலையத்தில் கைது

புதுடெல்லி, நவ.03

டெல்லி இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையத்தில் நேற்று சுங்கத்துறை அதிகாரிகள் பயணிகளிடம் தீவிர சோதனையில் ஈடுபட்டிருந்த போது லாகோசில் இருந்து தோகா வழியாக டெல்லி வந்த நைஜீரியப்பெண் ஒருவரின் உடைகளை அவர்கள் சோதித்தனர்.

அப்போது அந்த பெண் தனது பையில் சுமார் 4 கிலோ ஹெராயின் போதைப்பொருளை மறைத்து கடத்தி வந்திருந்தமை தெரியவந்தது. அதன் சர்வதேச சந்தை மதிப்பு ரூ.30 கோடி எனத் தெரிவிக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து அந்த பெண்ணை கைது செய்த அதிகாரிகள், அந்த போதைப்பொருளை பறிமுதல் செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த சம்பவம் டெல்லி விமான நிலையத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்ததாகக் கூறப்படுகின்றது.

# மட்டு. மாவட்டத்தில் ஒரு மாதத்தில் 700 க்கும் அதிகமான மாடுகள் சாவு




## கால்நடைப் பண்ணையாளர்கள் பெரும் இக்கட்டில்

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த ஒரு மாதத்தில் மட்டும் நோயினால் 700க்கும் அதிகமான மாடுகள் இறந்துள்ளன என கால்நடைப் பண்ணையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கால்நடைகள் இறப்பது குறித்து நேற்றைய தினம் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்திற்கு வருகைதந்து மாவட்ட உதவி அரசாங்க அதிபருடன் அவர்கள் கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

மட்டக்களப்பு சர்வமத பேரவை மற்றும் மயிலத்தமடு, மாதவனை கால்நடை வளர்ப்பு கமநல அமைப்பு ஆகிய அமைப்புகள் இணைந்து இந்த சந்திப்பு மேற்கொள்ளப்பட்டது. மட்டக்களப்பு மாவட்ட உதவி அரசாங்க அதிபர் நவேஸ்வரனை சந்தித்த குழுவினர் அண்மைக்காலமாக கிரான் மற்றும் செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் மாடுகள் திடீர்திடீர் என இறப்பது குறித்து இதன்போது கலந்துரையாடினர்.

மயிலத்தமடு, மாதவனை கால்நடை வளர்ப்பு கமநல அமைப்பின் தலைவர் எஸ்.நிமலன், மட்டக்களப்பு சர்வமத பேரவை தலைவர் த.மனோகரன் உட்பட கால்நடை பண்ணையாளர்கள், சர்வமத பேரவையின் உறுப்பினர்கள் எனப் பலர் இதில் கலந்துகொண்டனர்.

அத்துடன் இவ்வாறு கால்நடைகள் உயிரிழக்கும்போது அரச கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகம் முறையான நடவடிக்கைகளை முன்னெடுக்கவில்லையெனப் பண்ணையாளர்கள் கவலை தெரிவித்தனர்.

கடந்த 09தினங்களுக்குள் 200மாடுகள் உயிரிழந்துள்ளன எனவும் ,ஏற்கனவே இதற்கான தடுப்பூசிகள் வழங்கப்பட்டிருந்தால் மாடுகள் இறப்பதை தவிர்த்திருக்கமுடியும் எனவும் மயிலத்தமடு,மாதவனை கால்நடை வளர்ப்பு கமநல அமைப்பின் தலைவர் எஸ்.நிமலன் தெரிவித்தார்.

அரச கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகம் இது தொடர்பில் உடல்கூறுகளைப்பெற்றுச்சென்று ஒன்பது தினங்களை கடந்துள்ள நிலையிலும் இதுவரையில் அது தொடர்பில் முறையான நடவடிக்கையெடுக்கவில்லையெனவும் நேற்றை தினம் மாடுகளுக்கு தொண்டையடைப்பான நோய் என மருந்து வழங்குவதாகவும் இதனை முன்பே செய்திருந்தால் 700மாடுகளின் இறப்பைத் தடுத்திருக்கமுடியும் எனவும் கால்நடை பண்ணையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அரச கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகத்தினால் சில மருந்துகள் தனியார் நிலையங்களில் கொள்வனவு செய்யுமாறு பணிக்கப்பட்ட நிலையில் அதிக விலைகள் கொடுத்து அந்த மருந்துகளை பெற்று மாடுகளுக்கு வழங்கியபோதும் அவை பலனளிக்கவில்லையெனவும் பண்ணையாளர்கள் தெரிவித்தனர்.

வீடுகளில் வளர்க்கப்படும் மாடுகளுக்கு மட்டுமே காப்புறுதி செய்யப்படுவதாகவும் மேய்ச்சல் தரைகளில் வளர்க்கப்படும் கால்நடைகளுக்கு காப்புறுதி செய்யப்படாத காரணத்தினால் இழப்பீடுகளைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலை காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அரச கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகத்தின் ஊடாக கால்நடைக்கான மருந்துகளைப் பெற்றுக் கொள் வதற்கு அரசாங்கம் நடவடிக்கையெடுக்கவேண்டும் என்பதுடன் உயிரிழந்த மாடுகளுக்கான நஷ்ட ஈடுகளைப்பெற்றுத்தர நடடிக்கையெடுக்கவேண்டும் எனவும் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. ஒரு மாடு சுமார் ஒன்றரை இலட்சம் ரூபாவுக்கு மேல் பெறுமதி எனவும், சுமார் 700 மாடுகள் இறந்த காரணத்தினால் கால்நடை வளர்ப்பாளர்கள் பாரிய நஷ்டத்தை எதிர்கொண்டுள்ளனர் எனவும் அவர்கள் தெரிவித்தனர். இது தொடர்பிலான மகஜர் ஒன்றும் மட்டக்களப்பு மாவட்ட உதவி அரசாங்க அதிபர் நவேஸ்வரனிடம் கையளிக்கப்பட்டது.

# அக்கரைப்பற்று வைத்தியசாலையில் இருதய நோய் சிகிச்சை விடுதி திறப்பு



(கே.எ.ஹமீட்)

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் இருதய நோய் சிகிச்சை விடுதி நேற்று புதன்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் மற்றும் ஊழியர்கள், வைத்தியசாலை குழு இணைந்து ஏற்பாடு செய்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினரும் தேசிய காங்கிரஸின் தேசிய தலைவரும், வைத்தியசாலையின் ஸ்தாபகருமான ஏ.எல்.எம். அதாஉல்லா பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு விடுதியைத் திறந்துவைத்தார்.

வைத்தியசாலை குழு தலைவர் டாக்டர். எம்.ஏ.றக்கீஸ்த்து தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், வைத்திய அத்தியட்சகர் டாக்டர். ஜி. போல் றொஷான், அக்கரைப்பற்று மாநகர சபை மேயர் அதாஉல்லா அகமட் சக்கி, அக்கரைப்பற்று பிரதேச சபை தவிசாளர் எம்.ஏ. றாசிக், கல்முனை பிராந்திய சுகாதார வைத்தியப் பணிப்பாளர் டாக்டர் ஏ.எல்.எம்.றிபாஸ், இருதய நோய் வைத்திய நிபுணர் எம். ஏ. நௌாட் அலி மற்றும் வைத்திய நிபுணர்கள், வைத்திய அதிகாரிகள், தாதிய உத்தியோகத்தர்கள், வைத்தியசாலை ஊழியர்கள், வைத்தியசாலைக் குழு உறுப்பினர்கள், நிறுவனங்களின் தலைவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வின் போது பிரதம அதிதியினால் வைத்தியசாலைக்கு புதிய அம்புலன்ஸ் வண்டியும், தனவந்தர்களால் வைத்திய உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# பாடசாலை விடுதி மாணவன் கிணற்றில் விழுந்து மரணம்

திருகோணமலை - கிண்ணியா பிரதேசத்தில் 15 வயது மாணவன் ஒருவன் கிணற்றுக்குள் வீழ்ந்து உயிரிழந்துள்ளான்.

பாடசாலையின் விடுதியில் தங்கியிருந்து கல்வி கற்றுவந்த குறித்த மாணவன், விடுதிக்கு அருகிலிருந்த கிணற்றுக்குள் வீழ்ந்துள்ளான் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கிணற்றில் இருந்து மீட்கப்பட்ட மாணவன், கிண்ணியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளான்.

கிணற்றில் நீராடச்சென்ற மாணவனே நேற்று மாலை கிணற்றுக்குள் வீழ்ந்துள்ளான் என ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. திருகோணமலை பகுதியைச் சேர்ந்த 15 வயது சிறுவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சடலம் திருகோணமலை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பான விசாரணைகளை கிண்ணியா பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

# சுய தொழில் முயற்சிக்கு ஊக்குவிப்பு நன்கொடை





(கே.எ.ஹமீட்)

கிராம சக்தி வேலைத்திட்டத்தின் கீழ் சாய்ந்தமருது 10 ஆம் பிரிவிலுள்ள கிராம சக்தி சங்க பயனாளிகள் சிலருக்கான காசோலைகள் வழங்கும் நிகழ்வு நேற்று புதன் கிழமை இடம்பெற்றது.

பிரதேச செயலாளர் எம்.எம்.ஆஷிக்கின் வழிகாட்டலுக்கமைய இடம்பெற்ற இந்நிகழ்வில் திட்டமிடல் உதவிப்பணிப்பாளர் கே.எல்.ஏ.ஹமீட் பயனாளிகளுக்கான காசோலைகளை வழங்கி வைத்தார்.இங்கு தெரிவு செய்யப்பட்ட 05 பயனாளிகளுக்கு தலா 30 ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலைகள் வழங்கி வைக்கப்பட்டன.இதன் மூலம் இவர்களது சுய தொழில் முயற்சிக்கு ஊக்கமளிப்பதே இதன் பிரதான நோக்கமாகும்.

# பருவமழைக்குப் பின்னர் காணி விடுவிக்க முடிவு!

## வலி.வடக்கில் அமைச்சர் டக்ளஸ் உத்தரவாதம்



வடக்கில் காணிகளை விடுவிப்பது தொடர்பில் பருவ மழைக்காலம் நிறைவடைந்ததும் சாதகமான – தீர்க்க மான முடிவெடுக்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க உறுதியளித்துள்ளார் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

வலி. வடக்கு, மயிலிட்டி மீன்பிடித் துறைமுகத்துக்கு நேற்று (புதன்கிழமை) சென்ற அமைச்சர் அங்கு கடற்றொழிலாளர்களுடனான சந்திப்பின்போதே இவ் வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில் –

வடக்கு கிழக்கு மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் அபிலாஷைகளுக்கு தீர்வுகாணும் வகையில் அமைக்கப்பட்டுள்ள அமைச்சரவை உபகுழுக் கூட்டத் தில் ஜனாதிபதி இந்த உத்தரவாதத்தை வழங்கியுள்ளார்.

பருவ மழைக் காலம் நிறைவடைந்ததும் நேரடியாக சம்பந்தப்பட்ட பகுதிகளுக்கு விஜயம் செய்து தீர்க்க மான –சாதகமான முடிவுகளை எடுப்பதற்கு எதிர்பார்த்துள் ளார். எனவே, கடந்த காலங்களில் தமிழ்த் தரப்புகள் விட்ட தவறுகள் என்னவென்றால் கிடைத்த வாய்ப்புகளை சரியாகப் பயன்படுத்திக்கொள்ளவில்லை என்பதே.

இலங்கை – இந்திய ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டி ருந்தால் இவ்வாறான நிலைமைகள் ஏற்பட்டிருக்காது.

தற்போது கிடைக்கும் சாதகமான வாய்ப்புகளை சரியாகப் பயன்படுத்திக் கொண்டு இனியாவது இருப் பதை பாதுகாத்துக்கொண்டு அதனை முன்னோக்கி கொண்டு செல்ல வேண்டும்.

பிரச்சினைகள் தீர்வை நோக்கி போகவேண்டுமே யொளிய அதனைக் குழப்பிக்கொண்டு போகும் நோக்கம் எனக்கில்லை. – என அமைச்சர் தெரிவித்தார்.

வலி.வடக்கு, மயிலிட்டி மீன்பிடித் துறைமுகத்துக்குச் சென்ற அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அங்கு முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்திப் பணிகளைப் பார் வையிட்டதுடன் பிரதேசக் கடற்றொழிலாளர்களால் முன் வைக்கப்பட்ட அபிப்பிராயங்கள் தொடர்பில் ஆராய்ந்து தேவையான ஆலோசனைகளை சம்பந்தப்பட்ட அதி காரிகளுக்கு வழங்கினார்.



# கஞ்சா வியாபாரி ஒருவர் மட்டக்களப்பில் கைது!

மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் பிரிவிலுள்ள கருவப்பங்கேணி பிரதேசத்தில் கஞ்சா விற்பனை செய்து வரும் வீடு ஒன்றை நேற்று (புதன்கிழமை) முற்றுகையிட்ட பொலிஸார் கஞ்சா வியாபாரத்தில் ஈடுபட்ட கஞ்சா வியாபாரியை 78 ஆயிரம் மில்லிக்கிராம் கஞ்சாவுடன் கைது செய்துள்ளனர்.

மாவட்ட புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த தகவல் ஒன்றுக்கமைய சம்பவதினமான நேற்று பகல் மட் டக்களப்பு தலைமையக பொலிஸ் நிலைய சுற்றுச் சூழல் மற்றும் ஊழல் ஒழிப்பு பிரிவு பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் கஜநாயக்கா தலைமையில் பொலிஸ் சார்ஜன் ரி.கிருபா உள்ளிட்ட பொலிஸ் குழு வினர்கருவப்பங்கேணியிலுள்ளவீட்டை முற்றுகையிட்டனர்.

இதன்போது கஞ்சா வியாபாரத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த 21 வயதுடைய கஞ்சா வியாபாரியை 78 ஆயிரம் மில்லிக்கிராம் கஞ்சாவுடன் கைது செய்தனர்.

இதில் கைது செய்யப்பட்டவரை விசாரணையின் பின்னர் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக் கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

# திருமலை ஊடகவியலாளர்களால் துண்டுப் பிரசுரங்கள் விநியோகம்!




ஊடகவியலாளர்களுக்கு எதிரான குற்றங்க ளுக்கான தண்டனை இன்மையை முடிவுக்கு கொண்டு வருவதற்கான சர்வதேச தண்டனை விலக்களிப்பு தினத்தை முன்னிட்டு திருகோணம லையில் ஊடகவியலாளர்களால் துண்டு பிரசுரம் விநியோகிக்கப்பட்டது.

திருகோணமலை மாவட்ட ஊடகவியலாளர் கள் சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வு திருகோணமலை பிரதான பஸ் தரிப்பு நிலையத் திற்கு முன்பாக நேற்று (புதன்கிழமை) காலை இடம்பெற்றது.

ஊடகவியலாளர்களுக்கு எதிரான குற்றங் களுக் கான தண்டனை இன்மையை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான சர்வதேச தண்டனை விலக்களிப்பு தினத்தை முன்னிட்டு நேற்று (புதன்கிழமை) சுதந்திர ஊடக இயக்கத்தின் வழி காட்டலில் திருகோணமலை மாவட்ட ஊடகவியலா ளர் சங்கத்தால் நாட்டில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்கள், ஊடக ஊழியர்கள், கலை கலாசார செயற்பாட்டாளர்களது கொலைகளுக் கான விசாரணைகளும் இதுவரை மேற்கொள்ளப் படாமையையும் அதற்கான விசாரணை அறிக்கை வெளிவராமையையும் கண்டித்து இந்தத் துண்டு பிரசுரம் விநியோகிக்கப்பட்டது.

தண்டனை விலக்களிப்புக்கு எதிர்ப்பைத் தெரிவியுங்கள்! ஊடகவியலாளர்களிடமிருந்து ஒரு வேண்டுகோள். எனும் தலைப்பில் குறித்த துண்டுப் பிரசுரம் விநியோகிக்கப்பட்டது.

மேற்படி நிகழ்வில் திருகோணமலை மாவட்ட ஊடகவியலாளர் சங்கத்தின் உறுப்பினர்கள் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டிருந் தமை குறிப்பிடத்தக்கது.



# உடுத்துறை துயிலும் இல்லத்தில் சிரமதானப் பணிகள் நேற்று

யாழ்ப்பாணம் உடுத்துறை மாவீரர் துயிலும் இல்லத்தில் நேற்று (புதன்கிழமை) சிரமதானப் பணிகள் இடம்பெற்றன.

துப்புரவு செய்யப்பட்ட துயிலும் இல்லத் தில் மீட்கப்பட்ட சிதைவுகளுக்கு முன்பாக சுடரேற்றி மலரஞ்சலியும் செலுத்தப்பட்டது.

மாவீரர் வாரம் ஆரம்பமாகவுள்ள நிலையில் வடக்கு கிழக்கில் உள்ள மாவீ ரர் துயிலும் இல்லங்களில் சிரமதானப் பணிகள் இடம்பெறுகின்றமை குறிப்பிடத் தக்கது.

## அதிருப்தியடைந்த......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமுல்படுத்துவதில் திருப்திகரமான முன்னேற்றம் ஏற்படவில்லை என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவுக்கு ஜனாதிபதி எழுத்து மூலம் அறிவித்துள்ளார்.

இந்த முன்மொழிவுகளில், தேசிய சபையை ஸ்தாபிக்கும் நடவடிக்கை மாத்திரமே இதுவரையில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது என்று ஜனாதிபதி இன்று அனுப்பியுள்ள இந்த எழுத்துமூல அறிவிப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நீண்டகால முறைமை மாற்றங்களை ஏற்படுத்தும் நோக்கில் முன்மொழியப்பட்ட யோசனைகளில் வங்கி விவகாரம் மற்றும் நிதிச் சேவைகள் தொடர்பான குழு, பொருளாதார ஸ்திரப்படுத்தல் தொடர்பான குழு மற்றும் வழிகள் மற்றும் வழிமுறைகள் தொடர்பான குழு ஆகியவற்றை வங்கி விவகாரங்கள் தொடர்பில் நியமிப்பதற்கு முன்மொழியப்பட்டாலும் அவை இதுவரை முன்னெடுக்கப்படவில்லை என்றும் ஜனாதிபதி சபாநாயகருக்குச் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்தோடு துறைசார் மேற்பார்வைக் குழுக்களுக்கு ஐந்து இளைஞர் பிரதிநிதிகளை நியமிக்கவும், நாடாளுமன்ற வரவு – செலவுத் திட்ட அலுவலகத்தை நிறுவவும் முன்மொழியப்பட்ட போதும் அவையும் செயற்படுத்தப்படவில்லை.

இந்தப் பரிந்துரைகளின்படி 17 நாடாளுமன்ற துறைசார் மேற்பார்வைக் குழுக்களை ஸ்தாபிக்க வேண்டியுள்ள போதிலும் அவற்றுக்கான தலைவர்கள் இதுவரை நியமிக்கப்படவில்லை என்றும், அவற்றுக்கு நியமிக்கப்படும் இளைஞர் பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்கான அளவுகோல் இன்னும் தயாரிக்கப்படவில்லை என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அடுத்த வருட வரவு – செலவுத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் போது இந்த முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்த முடியும் என்றும், இதனால் அரசு எதிர்பார்க்கும் முறைமை மாற்றம் மிக விரைவாக எட்டப்படும் என்றும் ஜனாதிபதி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற வரவு – செலவுத் திட்ட அலுவலகத்துக்கான சட்டமூலத்துக்கும் அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளதுடன், கட்சித் தலைவர்களுடன் கலந்தாலோசித்து, சட்டமா அதிபரின் அனுமதியைப் பெற்ற பின்னர் அதனை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க உத்தேசித்துள்ளதாகச் சுட்டிக்காட்டியுள்ள ஜனாதிபதி , இது தொடர்பில் விசேட கவனம்செலுத்துமாறும்சபாநாயகருக்கு அறிவித்துள்ளார்.

## ஆர்ப்பாட்டங்கள்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆர்ப்பாட்டங்கள் மூலம் இந்த அரசைக் கவிழ்க்க முடியாது என்பதை எதிரணியினர் புரிந்துகொள்ள வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கொழும்பில் நேற்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசுக்கு எதிராக எதிரணி அரசியல் கட்சிகளின் தலைவர்களும், சிவில் மற்றும் தொழிற்சங்கப் பிரதிநிதிகளும் ஒன்றிணைந்து ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்திருந்த நிலையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மக்கள் விரும்பிய மாற்றம் ஏற்பட்டு விட்டது. அதனால் அவர்கள் இப்போது போராட்டங்களை விரும்பவில்லை.


எதிரணி அரசியல்வாதிகளும், அவர்களின் சகாக்களும்தான் இப்போது வீதிகளில் இறங்கிப் போராடுகின்றனர்.

எதிரணியினர் தங்கள் சுயலாப அரசியலுக்காகவே போராட்டங்களை நடத்துகின்றனர். ஆனால் போராட்டங்களால் ஒன்றும் நடக்கப்போவதில்லை.

அவசியமற்ற இந்தப் போராட்டங்களை நிறுத்தி விட்டு, நாட்டை மீளக்கட்டியெழுப்ப ஒன்றிணைய வேண்டும் என்று எதிரணிக்கு நான் மீண்டும் அழைப்பு விடுகின்றேன் – என்றார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622

# இறக்காமம் பாலர் பாடசாலைகளின் ஆசிரியைகளுக்குக் கல்விச் சுற்றுலா





(நூருல் ஹுதா உமர்)

இறக்காமம் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பாலர் பாடசாலை ஆசிரியைகளுக்கான கல்விச் சுற்றுலா முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆர். முஹம்மட் இம்டாடின் ஒருங்கிணைப்பில் பாலர் பாடசாலைகளில் கற்றல் வட்டங்களை நிறுவுதல் தொடர்பான விசேடகளப் பயணமாக அமைந்தது.

'நவீன கற்றல், கற்பித்தல் நுட்பங்களுடன் கூடிய பௌதீக அபிவிருத்தியை கற்றல் வட்டங்களை நிறுவுவதன் மூலம் அடைந்து கொள்ளல்' எனும் நோக்கோடு இக்கல்விச்சுற்றுலா முன்னெடுக்கப்பட்டது.

இறக்காமம் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் எம்.ஏ.சி அஹமட் நஸீல் தலைமையில் இடம் பெற்ற இக் கல்விச் சுற்றுலாவில் முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர் – அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ஆர்.எம்.ஏ.பி. எஸ்.விஜேரத்ன, இறக்காமம் பிரதேச செயலக சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் எம்.எச்.வஹாப், ஆலயடி வேம்பு பிரதேச செயலக முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.எஸ்.கரீமா, அம்பாரை பிரதேச செயலக முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி தனுஜா மற்றும் பாலர் பாடசாலை ஆசிரியைகளும் கலந்து கொண்டனர்.

# அனர்த்த முகாமைத்துவ கூட்டம் தம்பலகாமத்தில்




(ஹஸ்பர்)

வடகீழ் பருவ பெயர்ச்சி மழை வீழ்ச்சி ஆரம்பிக்கப்பட்ட நிலையில் அதன் மூலம் ஏற்படுகின்ற அனர்த்தங்களை எதிர் கொள்வது தொடர்பான கலந்துரையாடல் தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி தலைமையில் நேற்று முன்தினம் பிரதேச செயலக மண்டபத்தில் இடம் பெற்றது.

எதிர் வரும் காலங்களில் ஏற்படும் அனர்த்தத்தில் இருந்து மக்களை பாதுகாக்க முன் ஆயத்த நடவடிக்கைகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

இதில் பிரதி திட்டமிடல் பணிப்பாளர் ஐ.முஜீப்,வெளிக்கள உத்தியோகத்தர்கள், கிராம சேவகர்கள்,இராணுவம்,பொலிஸார் எனப் ப. தரப்பினரும் கலந்து கொண்டனர்.

